# தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

## C.S.I. TAMIL PARISH AL AIN, UAE




கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும்,என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்.

சங்கீதம்:18:2

*The Lord is my rock and my fortress and my deliverer, my rock, in whom I take refuge, my shield, and the horn of my salvation, my stronghold.*

*Psalm:18:2*

SEPTEMBER '2022

# CHAMP FOR CHRIST

## HELD ON 11TH SEPT

@ PARSONAGE

### MEMORY VERSE

ITS COMPULSORY FOR ALL THE CLASSES.
CBS CLASS TEACHERS HAVE GIVEN VERSES FOR THEIR RESPECTIVE CLASSES.

### STORY TELLING

IT SHOULD BE BIBLICAL STORIES.
STORY LENGTH - [MINIMUM - 1MIN] [MAX - 5MIN]
FOR SENIOR & TEENS CLASS

### FANCY DRESS

IT SHOULD BE BIBLICAL FANCY DRESS.
ACTION / DRESS / DIALOGUE WILL BE COUNTED AS EXTRA MARKS
FOR KINDER, BEGINNER, PRIMARY, JUNIOR & INTER

### SINGING


IT SHOULD BE BIBLICAL SONGS.
SONG LENGTH - [MINIMUM - 1MIN] [MAX - 3MIN]
FOR ALL THE CLASSES.

*Register Your Names on or before 20th Aug 2022 at the below mentioned WhatsApp number.*

MR. RAVI
0544044038

MRS. AUGUSTA
0566411676

REGISTER NOW ›



# FROM THE PASTOR'S DESK

கிறிஸ்துவுக்குள் அன்பான இறை மக்களே!

ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் உங்கள் அனைவருக்கும் வாழ்த்துக்கள்! ஸ்தோத்திரம்!!

**"என் நெருக்கத்திலே கர்த்தரை நோக்கிக் கூப்பிட்டேன்; அவர் எனக்குச் செவிகொடுத்தார்"**

**-சங்கீதம்:120:1**

**IN MY DISTRESS I CALLED TO THE LORD, AND HE ANSWERED ME.**

**-PSALM:120:1**

- ஆண்டவர் என் ஜெபத்தைக் கேட்டருளினார்
- ஆண்டவர் எனக்கு விடுதலையளித்தார்
- ஆண்டவர் என் பாவங்களை மன்னித்து வாழ்வளித்தார்

இப்படிபட்டவாழ்வுபெற ஆண்டவரின் உதவிக்காகஜெபிக்க அழைக்கப்படுகிறோம்.

கடந்த காலம் முழுவதும் நம்மை வழிநடத்தி, பாதுகாத்து வருகின்றனர் நமது ஆண்டவரை உங்களுடன் இணைந்து உள்ளத்தின் ஆழத்தில் இருந்து துதிக்கின்றேன்... தொடர்ந்து இந்த காலக்கட்டத்தில் இந்த தேசத்தில் நம்மை பாதுகாத்து வழி நடத்தி வருகின்ற ஆண்டவருக்கு நன்றி செலுத்துவோம்.

தொடர்ந்து அநேகர் இந்த காலகட்டத்தில் வேலைவாய்ப்புகள் இல்லாமல் பொருளாதாரத்தில் மிகவும் கஷ்டப்படுகிற குடும்பங்களுக்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம்.

## CHAMP FOR CHRIST -2022

நமது திருச்சபையின் வாயிலாக இந்த (செப்டம்பர்) மாதம் 9,10- 2022 ஆகிய தேதியில் CHILDREN'S BIBLE SCHOOL (CBS)- பிள்ளைகளுக்கு CHAMP FOR CHRIST-2022 என்ற நிகழ்ச்சியை ஒழுங்கு செய்து இருக்கிறோம் பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை ஆயத்தப்படுத்தி இந்த நிகழ்ச்சியில் பங்கு பெற உற்சாக படுத்துமாறு கேட்டுக் கொள்கின்றோம். இந்த நிகழ்ச்சியைக் குறித்து மேலும் விவரங்களை அறிந்து கொள்ள திருமதி.அகஸ்டா லாரன்ஸ், திரு.சந்தோஷ் மற்றும் திரு. ரவிந்திரா ஆகியோரை தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் இந்த நிகழ்வுக்காக ஜெபிக்குமாறு அழைக்கப்படுகிறோம்.

## சேர்ப்பின் பண்டிகை - HARVEST FESTIVAL -2022

வருகின்ற அக்டோபர் மாதம் 29,30-2022 ஆகிய தேதியில் நமது திருச்சபையின் வருடாந்திர சேர்ப்பின் பண்டிகை நடைபெற உள்ளது இதற்காக திருச்சபை குடும்பத்தார் அனைவரும் ஜெபத்துடன் ஆயத்தப்படுமாறும், ஒவ்வொரு குடும்பத்தினரும் தங்களின் பங்களிப்பினை வழங்குமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இதைக் குறித்து மேலும் விவரங்களை அறிந்து கொள்ள சேர்பின் பண்டிகை பொறுப்பாளர்கள் திரு.நெல்சன் சோபிதராஜ் மற்றும் திரு.ஹெவன் ஹெபா ஆகியோரைத் தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் ஒவ்வொரு வாரமும் (WEEKLY FOOD) உணவு மற்றும் தின்பண்டங்கள் விற்பனை நடைபெறும் திருச்சபை குடும்பத்தார் அனைவரும் தங்களது பங்களிப்பை அளித்து திருச்சபை வளர்ச்சி பணிகளிலும் தங்களை இணைத்துக் கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். இந்த பொறுப்பினை ஏற்று செய்ய இருக்கின்ற திருமதி.ஷெர்லி மெல்பின் மற்றும் திருமதி.ஜாக்ளின் மில்கா

ஹெவன் ஆகியோரை தொடர்பு கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம். அத்துடன் இந்த உன்னதமான திருப்பணியில் அனைவரும் ஜெபத்துடன் இனைந்து செயல்பட அழைக்கப்படுகிறோம்.

தொடர்ந்து இந்த காலங்களில் நமது விசுவாச வாழ்வில் சோர்ந்து போகாமல் ஆண்டவருக்குள் நிலைத்திருக்கவும் தேசங்களுக்காக, திருச்சபை களுக்காக, ஊழியங்களுக்காக, குறிப்பாக அமீரகத்தில் உள்ள மக்களுக்காக, அவர்களின் குடும்பங்களுக்காக, பாதுகாப்பிற்காக, வேலை வாய்ப்புகளுக்காக, பொருளாதாரத்திற்காக, நமது திருச்சபையின் குடும்பங்களுக்காக, நமது பிள்ளைகளின் கல்விற்க்காக, அவர்களின் எதிர்காலத்திற்காக, அவர்களின் உயர் கல்விக்காக அத்துடன் அவர்களின் ஆவிக்குரிய வாழ்விற்காக ஜெபிக்க அழைக்கப்படுகிறோம். மேலும் நமது திருச்சபையின் அனைத்து திருப்பணிகளுக்காக, திருச்சபையின் அனைத்து குடும்பங்களுக்காக ஊக்கமாய் ஜெபிக்கும் மாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

ஆண்டவரின் உன்னத பணியில் உங்கள் ஆயர்

Rev.S.J.Baskar

# அரசரின் நன்றி பாடல்



**சங்கீதம்:18**

**கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும், என் தேவனும், நான் நம்பியிருக்கிற என் துருகமும், என் கேடகமும், என் இரட்சணியக் கொம்பும்,என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்.**

**-சங்கீதம்:18:2**

**THE LORD IS MY ROCK AND MY FORTRESS AND MY DELIVERER,MY ROCK, IN WHOM I TAKE REFUGE, MY SHIELD, AND THE HORN OF MY SALVATION,MY STRONGHOLD.**

**-PSALM:18:2**

## முன்னுரை

இந்த சங்கீதம் தாவீது அரசரின் நன்றி பாடல் ஆகும்.
இதில் ...

- தாவீதின் நன்றி புகழ்ச்சியும் (சங்:18:1-27)
- தாவீதின் வெற்றியின் பெருமையும் (சங்:18:28-45)
- தாவீதின் சான்று பகிர்தளின் வாழ்வும் (சங்:18:48-50)

ஆகியவை கலந்த பாடலாக அறிந்து கொள்ள அழைக்கப்படுகிறோம். தாவீது தம் ஆட்சியில் உச்சக்கட்டத்தில் இருந்தபோது, தம் முதிர்ந்த வயதில் தாவீது இந்தப் பாடலை பாடியிருக்கிறார். இந்தப் பாடல் வரலாற்று நிகழ்ச்சியின் பின்னணியிலே ஒரு வேலை இப்பாடல் பாடப்பட்டிருப்பினும், அந்த வரலாற்றை வென்று வழிபாட்டிலே புகுந்து மெசியாத்தன்மை கொண்டு விளக்குகின்றது இந்த பாடலாகும். போர்க்களத்திலிருந்து வெற்றிவாகை சூடித் திரும்பிய தாவீது இந்தப் பாடலை பாடியிருக்கிறார். அதனைத் தொடர்ந்து ஆண்டுக்கொருமுறை கூடாரத் திருவிழாவின் போது நினைவு கூறுவதற்காக இஸ்ரயேல் மக்கள் இந்த பாடலை பாடினார்கள்.

## சங்கீதம்:18 :1–27 – தாவீதின் நன்றி புகழ்ச்சிப் பாடல்

- தாவீது ஆண்டவர் கொடுத்த மீட்புக்கு நன்றி செலுத்துகின்றார் (சங்:18:1-2)
- தாவீதின் குரலை ஆண்டவர் கேட்டார் என்று நன்றி செலுத்துகின்றார் (சங்:18:3-6)
- தாவீதுக்கு ஆண்டவர் விரைந்து வந்து உதவியதற்காக நன்றி செலுத்துகின்றார் (சங்:18:7-15)
- தாவீதுக்கு ஆண்டவர் அளித்த விடுதலைக்கு நன்றி செலுத்துகிறார் (சங்:18:7-19) இவ்வாறு தாவீதின் நன்றி புகழ்ச்சி பாடலாக இதை காண முடிகிறது.

வசனம்:2- கர்த்தர் என் கன்மலையும், என் கோட்டையும், என் இரட்சகரும் என் உயர்ந்த அடைக்கலமுமாயிருக்கிறார்

**இது தாவீது ஆண்டவரை பல்வேறு நிலைகளில், பலமுறை அழைப்பது ஆண்டவரே மீட்பர், அவரே எல்லாவற்றையும் செய்கின்றவர் என்று புகழ்ந்து போற்றி பாடுவதை குறிக்கின்றது.**

வசனம்:4- மரணக் கட்டுகள் என்னைச் சுற்றிக் கொண்டது

**இது தாவீது தன்னுடைய துன்பத்தின் பிடியில் இருக்கும் போது மரணத்திற்கு ஏதுவான சூழ்நிலையில் தள்ளப்பட்டு இருந்தபோது ஆண்டவர் அவரின் குரலைக் கேட்டார் என்பதை தாவீது குறிப்பிடுகின்றார்.**

**வசனம்:7-27 - இந்த வசனங்கள் அனைத்திலும் ஆண்டவரின் மகிமையும், அதிகாரமும், வெளிப்படுத்தப்படுகிறது. இது தாவீதின் வாழ்வில் பெற்ற விடுதலை வாழ்வை அடையாளப்படுத்துகிறது. கார்மேகங்கள் (வச:11) கல் மழையும், நெருப்புத்தழுலும் விழுந்தது (வச:12) சத்துரு, பகைவர்கள் (வச:17) இவற்றை எல்லாவற்றிலும் இருந்து ஆண்டவர் அளித்த விடுதலையாக தாவீது குறிப்பிடுகிறார்**

## சங்கீதம்:18 :1–27 – தாவீதின் நன்றி புகழ்ச்சிப் பாடல்

- ஆண்டவரின் உதவியுடன் நான் நேர்மையாக வாழ்ந்தேன் என்று தாவீது பாடுகிறார் (சங்:18:20-30)

- ஆண்டவரின் துணையால் எதிரிகளை வென்றேன் என்று தாவீது பாடுகிறார் (சங்:18:31-45)

**இது தாவீதின் வெற்றி முழக்கத்தின் பாடலாக காண முடிகின்றது.**

வசனம்:28- தேவரீர் என் விளக்கை ஏற்றுவீர்; என் தேவனாகிய கர்த்தர் என் இருளை வெளிச்சமாக்குவார்

**இது தாவீதின் வெற்றியின் போது ஆண்டவரே புகழ்ந்து "என் மகிழ்ச்சியை நிறைவுப்படுத்துகிறீர்" என்று புகழ்ந்து பாடுவதாகும்**

வசனம்:31- கர்த்தரையல்லாமல் தேவன் யார்?

**இது ஆண்டவரின் தனித்தன்மையை எடுத்துரைக்கின்ற விசுவாச (பற்றுறுதி) அறிக்கையாகும்.**

வசனம்:47- ஜனங்களின் சண்டைகளுக்கு நீர் என்னைத் தப்புவித்து.

**இங்கு "என் மக்கள்" என்பதற்கு பதிலாக "பிற மக்கள்" என்பது பொருந்தும், ஏனெனில் "பிற இன ஜனங்களுக்கு என்னைத் தலைவனாக்கினீர்" என்று குறிப்பிடுகிறார். எனவே தாவீதின் வெற்றிக்கும், வலிமைக்கும், பாதுகாப்பிற்கும் ஆண்டவர் துணையாய் இருந்தார் என்பதை பெருமையுடன் புகழ்ந்து பாடும் பாடலாகும்.**

## *சங்கீதம்:18:48–50– தாவீதின் சான்று பகிர்களின் பாடல்*

வசனம்:48- அவரே என் சத்துருக்களுக்கு என்னை விலக்கி விடுவிக்கிறவர் கொடுமையான மனுஷனுக்கு என்னைத் தப்புவிக்கிறீர்

**இது ஆண்டவரே அனைவருக்கும் மேலான உண்மைக் கடவுள் என்பதற்கு தாவீதின் அறிக்கை சான்றாக காணப்படுகிறது.**


## நிறைவாக

ஆண்டவர் நம்மை படைத்த கடவுள் மட்டுமன்று, நமக்கு மீட்பும், நிறை வாழ்வும் அளிக்கும் ஆண்டவராய் இருக்கிறார் என்பதை இந்த சங்கீதம் விளக்குகின்றது. அவருக்கு எதிராக இணையேதும் கிடையாது.எனவே ஆழ்ந்த நம்பிக்கையோடு அவரை தேடுகிற அவர்களுக்கு நிறை வாழ்வை அளித்து அவர்களுடன் ஆண்டவர் இருக்கின்றார் என்பதை புரிந்து கொள்ள அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக !

ஆண்டவரின் உன்னதப் பணியில் உங்கள் ஆயர்.

Rev.S.P.Baskar



# பூவாள்



மத்தேயு: *1:6*

**அதுவுமன்றி, எகிப்தின்ராஜா, சிப்பிராள் பூவாள்என்னும் பேருடைய எபிரெயமருத்துவச்சிகளோடே.**

**—யாத்:1:15**

**THEN THE KING OF EGYPT SAID TO THE HEBREW MIDWIVES, ONE OF WHOM WAS NAMED SHIPHRAH AND THE OTHER PUAH.**

**-EXO:1:15**

### முன்னுரை:

பூவாள் எகிப்தில் வாழ்ந்து வந்த மருத்துவப் பெண், மிகவும் எளிமையான வாழ்க்கை வாழ்ந்தவர், பக்தியான பெண், இவர் சிப்ராள் என்ற பெண்ணுடன் இணைந்து மருத்துவப் பணியைச் செய்தவர்; குறிப்பாக மோசே பிறந்தவுடன் அவர் உயிர் வாழ்வதற்கு பெரிய உதவி செய்தவர்களில் இவரும் ஒருவர் ஆவார்.

### பூவாள் துணிச்சலானவர் (யாத்:1:16)

மோசே பிறந்த காலகட்டத்தில் பிறந்த குழந்தைகள் அனைத்தையும் கொன்று விடும்படி அரசன் கட்டளையிட்டவுடன் (யாத்:1:16) அதை மீறி மோசேவை காப்பாற்றுவதில் துணிச்சலுடன் செயல்பட்டவர். இது இவர் கடவுளுக்கு பயந்து அரசரின் கட்டளையின் மீறி செயல்பட்டார்கள் என்பதை குறிக்கின்றது.

### பூவாள் பயபக்தியுள்ளவர் (யாத்:1:17)

கடவுளுக்குப் பயப்படுகின்ற பயம் என்பது இஸ்ரயேலின் விடுதலை வரலாற்றில் மிகவும் முக்கியமான சிறப்பு மையச் செய்தியாகும். கடவுள் மீது கொண்ட ஆழ்ந்த பக்தியும், பற்றுறுதியும் இவரின் விடுதலைப் பணிக்கு முக்கியமானதாக அமைந்தது. அதன் வழியாக தான் மோசேவை காப்பாற்றுவதில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார்.

### பூவாள் பலசாலியானவர் (யாத்:1:19)

எபிரேய பெண்கள் மிகவும் பலசாலிகள், தாங்கள் மருத்துவப் பணிக்கு போவதற்கு முன்பே பிள்ளை பெற்று விடுகின்றனர். இந்தச் செய்தியை பார்வோனிடம் துணிந்து சொல்லினவர் (யாத்:1:19) இஸ்ரயேல் வரலாற்றில் முதல் பெண் போராளியாக சிப்ராள்ளுடன் இணைந்து பூவாள் இடம்பெற்றது என்பது அவருடைய பலசாலி தன்மையை காண்பிக்கிறது என்பது சிறப்புக்குரிய ஒன்றாகும்.


### நிறைவாக

இன்றைக்கும் யாகேலைப் போல நாமும் கடவுளின் விடுதலைப் பணியில் நம்மை இணைத்துக் கொண்டு ஆண்டவருக்குள் ஒப்படைப்புள்ள, துணிச்சலுள்ள பெண்களாக வாழ அர்ப்பணிக்க அழைக்கப்படுகிறோம்.

ஆண்டவர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

இறைபணியில் உங்கள் ஆயரம்மா

*Mrs . E . Nancy Baskar*



# GOD IS ALWAYS WITH US



In a city , there lived a boy with his parents and his grandparents used to live far away in another city. Parents would take their son to his grandparents house during summer holidays every year. They would stay there for some days and the boy loved his stay there. This continued every year . With time , boy grew up. One day, the young boy said to his parents, “ Now I am big, I can go to grandparents house alone. Please let me go by myself.”

Parents didn’t agree at first but when boy insisted , they agreed. Day came when the boy was to leave for his grandparents house alone . They arrived at the railway station. Parents made him comfortable and he got settled in his berth. While waiting for the train to depart , his father handed him a piece of paper and told him to open it when he was afraid or scared . Train got signal to depart . The boy was very happy and excited.

At every station , people kept coming and going. Boy was seeing all this . After some time he started to feel lonely. At one station, a big man came and sat opposite to him . He got scared seeing that man. Every time he tried to think something else or tried to sleep , he ended up getting more scared . He started to feel very uncomfortable.

Then he remembered the piece of paper that his father gave him . He quickly reached his pocket and it said

Don’t be afraid son . I am here with you in the next compartment. Reading this , his heart was filled with happiness and all the fear got vanished . He ran to his father and hugged him and thanked him for everything he has done .

Life is like that too. When God sent us to this world, he has also given us letter, in which it is written, don't be sad or afraid. I am with you every moment, everywhere. I take the whole journey with you. Only you keep remembering me. Remember me sincerely, I will come in a moment.

So don't worry , don't panic, don't be discouraged. Have faith in God every moment. He is always with us throughout our journey till the last breath. Just keep trying to maintain this one feeling , leave everything to God without whose permission not even a leaf can move.

**Isaiah 41:10 "Fear not, for I am with you; be not dismayed, for I am your God; I will strengthen you, I will help you, I will uphold you with my righteous right hand."**

*ARTICLE BY*

**SIS. ISWARYA PATRICK**

WOMEN'S Fellowship





# நீதிமான்கள் கூப்பிடும்போது

**"நீதிமான்கள் கூப்பிடும்போது கர்த்தர் கேட்டு, அவர்களை அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார்" -சங்கீதம் 34:17.**

நீதிமான்கள் எப்பொழுதும் தேவனை நோக்கிக் கூப்பிடுகிறவர்களாய் இருக்கிறவர்கள். அவர்கள் தங்களுடைய வாழ்க்கையில் தேவனை அண்டிக்கொள்ளும்படியாக எப்பொழுதும் அவரைத் துணையாகக் கொண்டிருக்கிறவர்கள். நீதிமான்கள் எப்பொழுதும் ஜெபிக்கிறவர்களாய் இருப்பார்கள். தேவனைச் சார்ந்து கொள்வதே ஜெபம். தேவனை முற்றிலும் சார்ந்து வாழுவதே கிறிஸ்தவ வாழ்க்கை. நீதிமான்கள் கூப்பிடும்போது தேவன் அதைக் கேட்கிறார். நம்முடைய தேவன் நம் ஜெபத்தைக் கேட்கிறவர். இவ்விதமான ஒரு அருமையான தேவன் நமக்கு உண்டு. அவர்களுடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நீங்கலாக்கிவிடுகிறார் என்று வேதம் சொல்லுகிறது. நம்முடைய ஞானம் ஒன்றுமில்லை. தேவன் மாத்திரமே நம்முடைய வாழ்க்கையில் நமக்கு உதவிச் செய்ய முடியும். அநேக வேளைகளில் நாம் உபத்திரவம் பாடுகளைச் சந்திக்கும்பொழுது நாம் தேவனை நோக்கிக் கூப்பிடத் தவறி விடுகிறோம். அதுவே நம்முடைய வாழ்க்கையில் மிகப்பெரிய தவறு. அருமையானவர்களே! நாம் தேவனை நோக்கிக் கூப்பிடுவோம். அப்பொழுது நம்முடைய எல்லா உபத்திரவங்களுக்கும் நெருகங்களுக்கும் நம்மை நீங்கலாக்கி விடுவிப்பார். அவருடைய கரத்தில் நம்மை ஒப்புக்கொடுத்து நம்மைத் தாழ்த்தி அவரை நோக்கிப் பார்ப்போமாக.

YOUTH FELLOWSHIP

# தேவன் உபயோகித்த பாத்திரங்கள்

**DR. ஏர்னஸ்ட் பேட்டன்**

**(DR. ERNEST PATON)**

**MEDICAL MINISTRY AND FOUNDER OF ASHRAM**

**(1891-1970)**

**தொடர்ச்சி.......**

**ஆசிரமம் மற்றும் மருத்துவமனையின் வளர்ச்சி:**

ஆசிரமம் தனக்ற்டே-ற விதி முறைகளை கொண்டிருந்தது. வழிபாடு கல்விப்பணியி நற்செய்தி போன்ற காரியங்கள் அன்றாட வாழ்கையில் வகுக்கப்பட்டன. நிரந்தர உறுப்பினர்கள் சேவக் என்வும் இளையவர்கள் பாலசேவக் எனவும். அழைக்கப்பட்டனர். ஆசிரமம் வளர் ஆரம்பித்தது. மருத்துவர்கள் பேட்டனும ஜேசுதாசனும் சிறந்த குழுவாக எந்நேரமும் நோய் வாய்ப்பட்டவர்கட்கும்இ ஏழை எழிய மக்களுக்கும் சேவை புரிந்து வந்தனர். திருப்பத்தூர் பகுதி வரண்டதானதால் பெருவியாதியான காலராஜ் மலேரியாஜ் டைப்பாய்டு & பிளேக்தி பெரிய அம்மை போன்ற நோய்களால் பாதிக்கப்பட்டிருந்தது. இக்குழுவினரால் எண்ணற்ற உயிர்கள் காப்பாற்றப் பட்டன. நகர் மருத்துவ மனையை விட சிறப்பான நவீன வசதிகளுடன் மருத்துவமனை 125 படுக்கைகளை கொண்டதாக வளர்ந்தது. அதோடு



சேர்ந்து, ஆசிரமம் கிறிஸ்தவ செயல்பாடுகளில் கவனம் செலுத்தியது. வேத ஆராய்சி தியானம் ஆராதனை ஆவிக்குரிய பாடல்கள இசை ஆகியவற்றில் வளர்ச்சி பெற்றது. ஆண்டவரின் திருப்பணிக்காக வாழ்வதற்கென தங்கள் அனைத்தையும் துறந்து முற்றிலும் அற்பணித்த தன்னார்வ தொண்ட களைக் கொண்ட கிறிஸ்தவ செயல்பாடுகளுக்கு முக்கியத்துவம் செலுத்தும் இடமாக இது விழங்கியது.

## தன்னலமற்ற எழிய வாழ்கை:

அவர்கள் தியாகத்தோடு தன்னலமற்ற பணி செய்துஇ வாழ்கையின் அத்தியாவசிய தேவைகளை மட்டும் கடை பிடித்து ஆற்றிய சேவை ஈடு இணையற்று நின்றது இன்றும் நிற்கின்றது. டாக்டர். பேட்டன் திருப்பத்தூரில் இருந்தபோதுஇ அவரது தந்தை ஏராளமான சொத்துக்களை தன் மகனுக்காக வைத்து விட்டு மறுமைக்குள் சென்றார். டாக்டர். பேட்டன் அந்த சொத்துக்களில் ஒன்றையும் தனக்கென்று வைத்துக் கொள்ளாமல் அனைத்தையும் ஆசிரமத்திற்கென்று கொடுத்தார். பிரதான மருத்துவமனை கட்டிடம்இ நூலகம் அனைத்தும் பேட்டன் குடும்பத்தினரின் நிதியிலிருந்து உருவானவையே.

## இந்திய மக்கள் மீது அன்பு :

மருத்துவர் பேட்டன் இந்திய உடை உணவு பழக்க வழக்கங்களில் முற்றிலும் இந்திய வாழ்கை முறைகளையே தழுவினார். தன்னை இந்தியாவுடனும்இ இந்தியர்களுடனும் இணைத்துக் கொண்டார். இந்திய மக்களை தன்னுடையவர் களாகவே கருதினார். அவரின் வயோதிபத்தின் காரணமாக சில செயல்களில் தளர்வுற்றாலும; தனது பக்தி வைராக்கியம் சின்னண்ணன் பெரியண்ணன் குறையாமல் ஆண்டவருடைய சேவையை என்றும் நிறைவாய் தொடர்ந்து செய்து வந்தார். இந்த நாட்களில் இவர்களது மேலான ஊழியத்தையும் மக்கள் மேல் இவர்கள் கொண்டிருந்த கரிசனையையும் கண்ட மக்கள் அவர்களை தங்கள் குடும்பத்தின் அங்கத்தினரைப் போல ஏற்றுக் கெண்டனர். அதனை வெளிப்படுத்தும் வகையில் அவர்களை “அண்ணன்” என்று அழைக்கவும் ஆரம்பித்தனர். அதன் விழைவாக பின் நாட்களில் அவர்கள் இருவரும் மிகவும் மரியாதையோடும் அன்போடும் கூட அந்தப் பகுதி வாழ் மக்கள் மத்தியில் மருத்துவர் ஊழியக்காரர் என்று அறியப்படுவதை விட “சின்னண்ணன் பெரியண்ணன்” என்றே அறியப்பட்டனர்.

## தன் மண்ணுக்குத் திரும்பாதவர் :

பெரியண்ணனாக அறியப்பட்ட இந்த பரிசுத்தவான் 1970 மே 2 ஆம் நாள் தனது 79ஆவது வயதில் மறுமைக்குள் கடந்து சென்றார். இவரது வாழ்வின் 41 ஆண்டுகளை கடுமையான ஆண்டவரின் பணியில் கழித்தார். செல்வந்தராகப் பிறந்து அனைத்தையும்

துறந்து தூர தேசத்தில் வந்துதேவப்பணி புரிந்து மரித்தார். இந்தியாவில் பணமின்றி வறுமையையும்; ஒன்றுமில்லாமையையும் தன் ஆண்டவருக்காக சகித்தார். 3 ஜோடி ஜிப்பாக்களும் மூன்று வேஷ்டியும் தான் அவரது உடமை அதுவும் அன்பளிப்பாக கொடுக்கப்பட்டவைகள் தான். நன்றியுள்ள கிராமத்து மக்கள் இம்மகானின் இறுதி அஞ்சலிக்கு மிகவும் பாரத்தோடும் கண்ணீரோடும் ஆயிரக்கணக்கில் திரண்டு வந்தனர். ஆசிரம ஜெப ஆலயத்தின் பின் புறத்தில் DR. ஜேசுதாஸின் பெரியண்ணனின் அருகில் நல்லடக்கம் செய்யப்பட்டார்.

இரு ஆசிரம நிறுவனர்களும் ஆண்டவரிடம் மறுமைக்குள் சென்றபின் மருத்துவ மிஷனரி பணியிலும் நற்செய்தி பணியிலும் ஒரு அத்தியாயம் நிறைவு பெற்று விட்டது என்றே கூறலாம்.

**“என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும் அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். இந்த என் தோல் முதலானவை அழுகிப் போன பின்பு நான் என் மாம்சத்தில் இருந்து தேவனைப் பார்ப்பேன்”.**

**-யோபு 19: 25-26**

என்ற வாக்குறுதியுடன் தங்கள் பிரயாசங்களை விட்டு ஓய்ந்திருக்கிறார்கள்.

*ARTICLE BY*

M.NESAMONY & FAMILY



தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

WELCOME

# HARVEST FESTIVAL

SUNDAY 10.30 AM

30 OCTOBER 2022

You're Invited

Thanks giving

AUCTION

FOOD SALE

# AUGUST

## Congratulations

### KIDS COLOURING

Bernicia
Smyrna Syntche
Jania Preni
Johan Sanjo
Hazel Hartlyn
Reagan Shan
Kariss Angelo
Chris Gabiriel

### CODE WORD

Patricia
Jania Preni
Johan Sanjo
Hazel Hartlyn
Kariss Angelo
Sherin Shah
Jason Eric

### WORD SEARCH

Sherin Shah
Johan Sanjo
Roshan
Eric Aaron
Jason Eric

### CROSS WORD

Shelbino
Roshan
Johan Sanjo
Sherin Shah
Eric Aaron
Joshua

### BIBLE QUIZ

Shelbino
Roshan
Joshua

**Well Done!**

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.

You are encouraged to Complete the tasks given in Manna; and do please send to us; on or before 20th of every month, Email Subject shall be in the following format.

**Email Subject: Your name / Quiz, type / Month - Year**

**To Church Email: csitcalain@gmail.com**

மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

# GENESIS: 1-10

## ஆதியாகமம்: 1-10

SEPTEMBER '22 - QUESTIONS

1. நான்காம் நாள் என்ன ஆயிற்று?
2. ஆவிலா தேச முழுவதும் ஓடிய ஆற்றின் பெயர் என்ன?
3. நீ எங்கே இருக்கிறாய் என்று ஆண்டவர் யாரைக் கேட்டார்?
4. மெகுயவேலைப் பெற்றது யார்?
5. ஏனோக்கின் காலம் எவ்வளவு?
6. கொப்பேர் மரத்தில் என்ன செய்யப்பட்டது?
7. எத்தனை நாள் பூமியில் பெரும் மழை பெய்தது?
8. எப்பொழுது பூமி காய்ந்திருந்தது?
9. நோவாவின் குமாரர் யார்?
10. ஏபேரைப் பெற்றது யார்?




### ஆகஸ்ட் - 2022-மாதம் கேள்விக்கான விடைகள் / எழுதியவர்கள்

1. வெளி:11:3 | 2. வெளி:12:13 | 3. வெளி:13:3 | 4. வெளி:14:13 | 5. வெளி:15:7
6. வெளி:16:17 | 7. வெளி:17:3 | 8. வெளி:18:21 | 9. வெளி:19:11 | 10. வெளி:20:7

திருமதி. ஜோனிஷ் ஹெர்ஷெல், திருமதி.ஜெயந்தா ஜான், திருமதி.ஜெயின் ராஜவேல், திருமதி.ராதிகா செல்வகுமார், திருமதி.ரோஸ்லின் பாலாஜி, திருமதி.பிப்லின் நெல்சன், திருமதி.ஹெலன் கம்பீரம் திருமதி.ஜமுணா ராணி, திருமதி. பமீலா டேனியல், செல்வி.அஜின்ஷா, செல்வி.ஷெரின்ஷா

ஒவ்வொரு மாதமும் மன்னாவிற்கான விடைகள், அதின் அதிகாரம் மற்றும் வசனமும் குறிப்பிட்டு அம்மாதம் 20ம் தேதிக்கு முன் ஈமெயில் அல்லது வாட்சப் மூலமாக கீழ்கண்ட தலைப்பில் அனுப்பி வைக்கவும்.


மன்னாவிற்கான விடைகளை நீங்கள் எழுதி அனுப்பியிருந்தும், பிள்ளைகளின் பெயர் அல்லது உங்கள் பெயர் விடுபட்டிருந்தால் அதற்காக வருந்துகிறோம். தயவுகூர்ந்து உடனடியாக எங்களுக்கு தெரியப்படுத்தவும் அடுத்த மன்னாவில் அதை சரிசெய்து பதிவிட விரும்புகிறோம்.

YOUR NAME / BIBLE QUIZ / APR'22 | SENT TO: CSITCALAIN@GMAIL.COM

056 766 8348

KIDS COLOURING

# CONNECT TO GOD



# THE PASSWORD IS PRAYER

PRIMARY

# Jesus Teaches About Prayer



Ask

Seek

Knock

For everyone who asks receives; he who seeks finds; and to him who knocks, the door will be opened. Luke 11:10 (NIV)

The puzzle is based on Luke 11:1-9 (NIV).

| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| P | R | A | Y | Y | B | S | L | E | F | X | E | B | P | H |
| U | K | I | N | G | D | O | M | L | T | S | P | D | Q | A |
| A | Y | Z | A | U | B | Q | Q | S | E | E | E | R | X | L |
| U | Q | B | S | B | U | R | W | F | Z | A | A | E | G | L |
| O | R | R | K | P | U | J | I | U | R | Z | D | C | K | O |
| O | N | E | O | L | F | N | P | I | P | I | A | Q | H | W |
| T | A | A | P | X | A | A | F | V | I | X | E | M | M | E |
| E | M | D | E | D | M | F | T | W | T | F | S | N | U | D |
| M | E | C | N | H | R | D | O | H | N | L | F | B | D | W |
| P | P | K | K | R | N | E | G | R | E | S | M | Y | Y | U |
| A | V | N | I | I | Q | I | C | C | G | R | T | C | D | Y |
| T | N | O | F | U | N | J | C | E | S | I | N | S | A | O |
| I | J | C | W | D | K | S | D | G | I | J | V | Q | I | A |
| O | Q | K | I | F | B | E | K | P | I | V | J | E | L | A |
| N | M | M | W | N | M | J | J | P | V | W | E | M | Y | P |


| | | | | |
|---|---|---|---|---|
| FIND | PRAY | OPEN | TEMPATION | FRIEND |
| SEEK | FATHER | NAME | KNOCK | RECEIVE |
| MIDNIGHT | DAILY | TEACH | LEAD | BREAD |
| SINS | KINGDOM | HALLOWED | FORGIVE | ASK |

# Keep On Praying



Then Jesus told his disciples a parable to show them that they should always pray and not give up. Luke 18:1 (NIV)

This puzzle is based on Luke 18:1-8 (NIV)




ACROSS


2. To be treated fairly
3. A woman whose husband has died and who has not remarried
5. A simple story illustrating a moral or religious lesson
6. The period from sunrise to sunset (light)

DOWN

1. The period between sunset and sunrise (darkness)
2. An official who hears and decides cases brought before a court of law
4. A belief that does not require proof
5. To speak to or make a request to God

JUNIOR

# QUIZ!




**Across**

**7** "I tell you, Nay: but, except ye ______, ye shall all likewise perish." Luke 13:5 (6)

**8** The book of this prophet was handed to Jesus to read in the synagogue. Luke 4:17 (6)

**9** "And there shall be signs in the sun, and in the moon, and in the ____s." Luke 21:25 (4)

**10** The liturgical season celebrated after Christmas. (8)

**11** An act of devotion to show sorrow for one's sin. (7)

**13** "That he would _____ unto us, that we being delivered out of the hand of our enemies might serve him without fear." Luke 1:74 (5)

**15** The tetrarch of Galilee. Luke 3:1 (5)

**17** It's easier for a camel to go

**21** "Why do the disciples of John ____ often ..." Luke 5:33 (4)

**22** Jesus compared men of this country with the Jews of the time. Luke 11:32 (6)

**23** "And it is ______ for heaven and earth to pass, than one tittle of the law to fail." Luke 16:17 (6)

**Down**

**1** "______ it therefore in your hearts, not to meditate before what ye shall answer." Luke 21:14 (6)

**2** "And when the day began to ____ away, then came the twelve, and said unto him, Send the multitude away ..." Luke 9:12 (4)

**3** "When I was daily with you in the temple, ye _____ed forth no

**5** Jesus mourns for the hard hearts of the people of Jerusalem saying, "how often would I have _______ thy children together, as a hen doth gather her brood under her wings." Luke 13:34 (8)

**6** One of the men in the line of Christ from Luke 3:36. (6)

**12** These people asked for increased faith in Luke 17:5. (8)

**14** The father of James and John. Luke 5:10 (7)

**16** The Hebrew name for the Lord. (6)

**18** The holiday that celebrates the events of Luke 24. (6)

**19** The prodigal son returned to his father with plans to be this type of servant. Luke 15:19 (5)

**21** If a son asks a father for this, will he give him a serpent?

**SENIOR**
*& above*




## How it Works




**STEP 1** DONATE IN THIS BOX

**STEP 2** COLLECT & SEND

**STEP 3** EDUCATE & CHANGE CHILD'S LIFE



THE CBS MINISTRY KIDS TOGETHER THEY ARE SUPPORTING, EDUCATING AND CHANGING ONE KID'S LIFE (Ms. Rithika/Chennai).

COIN SAVNG BOX WILL BE GIVEN TO ALL KIDS AND EACH KID NEED TO SAVE MONEY AND THAT WILL BE COLLECTED FROM CBS KID'S BY OUR CHURCH VOLUNTEER AND SENT TO THE KID FOR HER EDUCATION & FOR HER BAISC NEEDS.

# September

## Happy Birthday

01-SEP MSTR. ALLEN RIYO
04-SEP MR. CELIN JOSE
04-SEP MRS. JAMUNA RANI
05-SEP MRS. J.N. BASIL SHALLU
08-SEP MISS. DIVYA DHARSHINI
09-SEP MISS. ABIGHAIL
09-SEP MR. VINITH J. SAMUEL
10-SEP MRS. SHIBY ANGEL
10-SEP MR. ASPHIN RAJ.P
10-SEP MRS. R.MUNEESWARI
11-SEP BABY. JEMIMA ASHNI
11-SEP MR. SHERUN.N.B
12-SEP MRS. PAMELA JENNIFER
17-SEP MR. NELSON SOPITHA RAJ
19-SEP MR.SUJI KUMAR
20-SEP BABY. JAMIE SHINO MATHEW
21-SEP MSTR. JESVIN BOSE
22-SEP BABY. JANET THIRZA
23-SEP MISS. SHARON S. RAO
23-SEP MR. SHIVI MOL SHALIN
24-SEP MR. JOHN PRABAHAR.B
24-SEP MR. DANESH YOGENDRA RAO
27-SEP MISS. PRAGATHI
28-SEP MRS. S.DIVYA SHERRIN
29-SEP MR.SUGITHA ISRAVEL
30-SEP MSTR. IMMANUAL

## HAPPY ANNIVERSARY

02-SEP MR.JEYAKUMAR & MRS.VIVILIN JUNI
03-SEP MR. CHANDRASEKAR.P & MRS. HARIKA CHANDRASEKAR
05-SEP MR. PRAVEEN PAUL & MRS. SUGITHA ISRAVEL
07-SEP MR. SURESH RAJAN & MRS. ANITHA RAJAN
09-SEP MR. DANESH YOGENDRA RAO & MRS. ANNIE SELVI DANESH
11-SEP MR.VINITH J.SAMUEL & MRS. M.AISHWARIYA
15-SEP MR.PRINCE EMMANUVEL & MRS. JOSEPHINE NIMSHI
16-SEP MR.STALIN JOSE .A. & MRS. BABI KUTTI .J
16-SEP MR.D.RAJAVEL & MRS. JEIN ARPUTHAKANI RAJAVEL


11 - SEPTEMBER
2022
GET READY
CHAMPS FOR CHRIST
COMPETE • CONQUER • CELEBRATE
2022
CHAMP FOR CHRIST
EVENTS
Memory Verse
Singing
Fancy Dress
Story Telling
தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE
THAT THEY ALL MAY BE ONE
CHURCH OF SOUTH INDIA

EDITOR

THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348

Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY

